Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.19 of 2023**

Deposition of P.W. 10 (L.W. 15) } Prosecution } Defence }

Name of the Witness : திருமதி.பொற்கொடி

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 08.12.2025.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பென்னாகரம் வட்டம், கூத்தப்பாடி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2022ல் கலப்பம்பாடி

கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது 29.05.2022 அன்று நானும், என்னுடைய உதவியாளர் சக்திவேலும் சம்பவ இடத்திலிருந்து செக்போஸ்ட் அருகே மதியம் 03.30 மணிக்கு போய் கொண்டிருந்த போது பெரும்பாலை போலிசார் எங்களை குண்டுபெருமாள் கோவில் வேகதடை அருகே வரசொன்னார்கள், நானும், எனது உதவியாளரும் அங்கு போனோம். அங்கு எதிரி குபேந்திரன் இருந்தார். சாட்சி நீதிமன்றத்திலிருக்கும் எதிரியை அடையாளம் காட்டுகிறார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் போட்டேன். போலிசார் கறை கத்தி, கறை படிந்த வேட்டி, சட்டையை குண்டுபெருமாள் கோவில் அருகே இருந்து கைப்பற்றியதற்காக எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். குண்டுபெருமாள் கோவில் அருகே எழுதி கையெழுத்து வாங்கினார்கள். பிறகு காவல் நிலையம் வந்து டைப் செய்து கையெழுத்து வாங்கினார்கள். காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5** ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலிசார் விசாரணையில் 29.05.2022 அன்று மாலை 3.30மணியளவில் போலிசார் என்னையும், என் உதவியாளர் சக்திவேலுவையும் பழையூர் செக்போஸ்ட் அருகே வர சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அப்போது டிஎண் 29 ஏஎப் 3588 பஜாஜ் டிஸ்கவர் வண்டியில் பென்னாகரம் பக்கமிருந்து மேச்சேரி நோக்கி வந்த குபேந்திரனை எங்கள் முன்னிலையில் கைது செய்து கந்தசாமியை வெட்டி கொலை செய்ததாக தன்னிச்சையாக வாக்குமூலம் கொடுத்தார், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அதில் நானும், என் உதவியாளர் சக்திவேலும் கையெழுத்து செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அப்போது போலிசார் டிஎண் 29 ஏஎப் 3588 பஜாஜ் டிஸ்கவர் வண்டியை கைப்பற்றுதல் கைப்பற்றியதாகவும் அதில் நானும், என் உதவியாளர் சக்திவேலும் கையெழுத்து செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2) குண்டுபெருமாள் கோவில் அருகே இருந்த முள்புதரில் மறைத்து வைத்திருந்த ரத்தகறை படிந்த கத்தி, ரத்தகறை படிந்த வேட்டி, சட்டையை மறைத்து வைத்திருந்ததை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை

போலிசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய போது நானும், எனது உதவியாளர் சக்திவேலும் சாட்சியாக கையெழுத்து செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த விவரத்தை நான் போலிசார் விசாரிக்கும் போது சொன்னேன் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கலப்பம்பாடியில் 15.03.2020லிருந்து 8வது மாதம் 2023 வரை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். நான் அங்கு பணிபுரிந்த போது பென்னாகரத்தில் குடியிருந்தேன். விதிகள் படி நான் கலப்பம்பாடியில் பணி புரிவதால் அங்கு தான் குடியிருக்க வேண்டும் என்றால் சரிதான். கோவள்ளிகோம்பையில் நடந்த பிரச்சனை பற்றி எனக்கு தெரியும். ஊர்காரர்கள் எல்லோரும் சேர்ந்து ரேசன்கடை, பள்ளிகூடம், கால்நடை மருத்துவம் கட்டி கொடுக்க வேண்டும் என்று மனு என்னிடம், தாசில்தார், மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் மற்றும் முதல் அமைச்சரின் தனி பிரிவிக்கு மனு ளகொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த மனு சம்பந்தமாக நான், தாசில்தார் சென்று விசாரித்தோம் என்றால் சரிதான். ஆவணங்களை பார்வையிட்டு 1 1/2 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருப்பதாக நான் சொன்னேன் என்றால் சரிதான். அந்த 1 1/2 ஏக்கர் நிலம் இறந்த போன கந்தசாமியின் மாமனாரின் ஆக்கிரமிப்பில் இருந்தது என்றால் சரிதான். அவர்கள்

ஜேசிபி வைத்து நரவியது போது நாங்கள் சென்று தடுத்தோம் என்றால் சரிதான். இது எல்லாம் ஊர்பொதுமக்கள் சார்பாக நடந்தது என்றால் சரிதான். இது சம்பந்தமாக குபேந்திரனுக்கும், கந்தசாமிக்கும் தனிப்பட்ட விரோதம் இல்லை என்றால் சரிதான்.

2) பென்னாகரம் - மேச்சேரி போகும் ரோடில் கலப்பாடியிலிருந்து கோவள்ளிகோம்பை ரோட்டிற்கு 3 கிமீ தூரம் இருக்கும். நான் சம்பவ நடந்த அன்று என் பாட்டி வீடான சோளப்பாடியில் இருந்தேன். அந்த ஊரை சேர்ந்தவர்கள் கந்தசாமி இறந்ததை பற்றி காலை 06.20மணிக்கு தகவல் சொன்னார்கள். நான் 07.30மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தேன். நான் போவதற்கு முன்பாகவே போலிசார் அங்கிருந்தார்கள். பிறகு எல்லோரும் பேசி புகார் கொடுத்தார்கள். புகார் எத்தனை மணிக்கு கொடுக்கப்பட்டது என்று தெரியாது. புகார் கொடுக்க நான் காவல் நிலையத்திற்கு போகவில்லை. அங்கு சாலை மறியல் செய்தார்கள். எஸ்.பி வந்த பிறகு 5 மணிநேரம் கழித்து பிரேதம் எடுத்து செல்லப்பட்டது. எத்தனை மணிக்கு பிரேதம் அப்புறப்படுத்தப்பட்டது என்று தெரியாது. சுமார் ஒரு மணி இருக்குமா என்றால் இருக்கலாம்.

3) பிரேதத்தை எடுத்த உடனே நானும், எனது உதவியாளரும் காவல் நிலையம் போய் விட்டோம். போலிசார் எங்களை மறுபடியும் கூப்பிடும் வரை பக்கத்திலிருந்து ஆர்.ஐ. குவாட்டர்சில் இருந்தோம்.

பிரேதம் எடுத்த பின்னர் எங்கள் அலுவலகம் சென்று அலுவலகத்தில் ரிப்போர்ட் செய்து விட்டு பின்பு காவல் நிலையம் வந்தோம். என் முன்னிலையில் வாக்குமூலம் எதிரி கொடுக்கவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் டைப் செய்து வைத்திருந்ததில் கையெழுத்து போட்டேன். கோவள்ளிகோம்பையில் ஊர் அமைப்பு எனக்கு தெரியும். பென்னாகரம் - மேச்சேரி ரோடிலிருந்து கோவள்ளிகோம்பை ரோடு மேற்கு பக்கமாக போகிறது என்றால் சரிதான். கந்தசாமி வீடும், குபேந்திரன் வீடும் எதிர் எதிரே உள்ளது என்றால் சரிதான். இரண்டு பேருக்கும் பொது வழி சம்பந்தமாக பிரச்சனை எதுவும் இல்லை.

4)கோவள்ளிகோம்பைக்குசென்றால் கோவள்ளிகோம்பையில் இருந்து வெளியே வரவேண்டும் என்றால் வேறு வழி இல்லை என்றால் சரியல்ல. மண் ரோடு உள்ளது, அதில் வாகனங்கள் போவது கஸ்டம். கலப்பம்பாடி சுற்றி மலைபகுதி என்றால் சரிதான். கோவள்ளிகோம்பையிலிருந்து மேச்சேரி போகும் வழியில் சின்னம்பள்ளி, பெரும்பாலை, அதற்கு அடுத்து தான் பழையூர் செக்போஸ்ட் என்றால் சரிதான். பெரும்பாலைக்கும், பழையூர் செக்போஸ்ட்டுக்கும் நடுவில் குண்டுபெருமாள் கோவில் உள்ளது என்றால் சரிதான். பிரேதத்தை அப்புறப்படுத்திய பிறகு போலிசார் அந்த இடத்திலும், குபேந்திரன் வீட்டிலும் அதிக அளவில் இருந்தார்கள். குபேந்திரன் வீட்டை

கந்தசாமியின் உறவினர்கள் நெருப்பு வைத்து விட்டார்கள் என்றால் சரிதான். இது சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. குபேந்திரன் வீட்டிலிருந்த குபேந்திரனின் மனைவி, குழந்தைகளை விரட்டியடிக்கப்பட்டு வீட்டின் முன்னால் இருந்த குபேந்திரனின் வண்டியை போலிசார் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. குபேந்திரனோ அவரது குடும்பத்தை சேர்ந்தவர்கள் யாரும் இல்லை என்பதால் நான் தான் குபேந்திரன் வீடு எறிக்கப்பட்டது சம்பந்தமாக புகார் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் அவர்கள் யாரும் அங்கில்லை.

5) என் முன்னிலையில் குபேந்திரன் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், ஏற்கனவே காவல் நிலையத்திலிருந்த குபேந்திரன் இருந்தார் என்றும் போலிசார் தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையிலும், ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் சான்று பொருள்களை கைப்பற்றாததால் தான் நான் நீதிமன்ற முதல் விசாரணையில் நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.